Dam across the Vaniar

* 680 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal to construct a dam across the Vaniar river near Harur, Salem district; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) & (*b*) In 1952, a Reservoir Scheme across the Vaniar near Harur was investigated, but was deferred on account of the prohibitive cost and uncertain inflow of water.

அரசாங்க பஸ் துறை

* 681 கேள்வி.—திரு. சா கணேசன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஓடுகிற அரசாங்க பஸ்களின் எண்ணிக்கை என்ன?

(இ) தலைமை நிர்வாகி முதல் அடித்தள ஊழியர்வரை அதில் வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கை என்ன?

(உ) அவர்களில் டிரைவர், கண்டக்டர், பட்டறையாட்கள் எண்ணிக்கை தனித்தனியே என்ன? அலுவலக ஊழியர்களின் எண்ணிக்கை என்ன?

(எ) தலைமை நிர்வாகி முதல் எல்லோருக்கும் சம்பளம், படி, ஊதியம், மானியம் உள்பட ஆகும் செலவு வருடம் அல்லது மாதம் ஒன்றுக்கு எவ்வளவு?

(ஐ) இவர்களுக்கு போனஸ் ஏதாவது கொடுக்கப்படுகிறதா?

(ஒ) ஆமென்றால், எந்த முறையில், என்ன அடிப்படையில் யார் யாருக்கு எவ்வெப்போது கொடுக்கப்படுகிறது? கொடுக்கும் தொகை விவரமென்ன?

(ஔ) வெளியூர்களில் ஓடும் தனியார் பஸ் கட்டணம் மைலுக்கு எவ்வளவு? சென்னை நகரில் ஓடும் பஸ் கட்டணம் மைலுக்கு எவ்வளவு?

The Hon. Sri R. VENKATARAMAN (அ) to (ஔ): The particulars are furnished in the paper [a] placed on the Table of the House.

Planning Board for State

* 682 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any proposal is under the consideration of the Government to constitute a Planning Board at the State level; and

(*b*) if so, the details thereof?

[a] Printed as Appendix II on page 482 infra.

26th July 1962]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Planning Commission has suggested that a State Planning Board may be set up in this State. This proposal is under the consideration of the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த ஸ்டேட் ப்ளானிங் போர்டு என்னும் ஸ்தாபனத்தை எந்த அடிப்படையில் அமைப்பதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறது? அதில் உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களும் இருப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி ஒரு ஸ்டேட் ப்ளானிங் போர்டு அமைக்கவேண்டுமா என்பதே இப்பொழுது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: ஸ்டேட் பிளானிங் போர்டு அமைக்கும் ஆலோசனை ஒருபுறமிருக்க, நமது நிதி இலாகாவிலிருந்த ப்ளானிங் யூனிட் கலைக்கப்பட்டுவிட்டதா? அல்லது அது தொடர்ந்து இயங்குகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்க அலுவலகத்தில் நிதி இலாகாவில் அந்த யூனிட் இருக்கிறதா, வேறு எந்த இலாகாவில் இருக்கிறதா என்பதல்ல முக்கியம். அந்த யூனிட் எல்லா அப்படியே இருக்கும். அது கவனிக்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மருத்துவ மனை (மொபைல் வான்)

* 683 **கேள்வி.—திரு. ம. கமலநாதன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கிருஷ்ணகிரி மருத்துவ மனைக்குச் சொந்தமான **Leprosy mobile van** உபயோகிக்கப்படாமல் ஏன் கிருஷ்ணகிரி பிரயாணிகள் தங்கும் விடுதியில் இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப் பட்டிருக்கிறது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The van referred to in the question does not belong to Government. It is the property of the Hindu Kusht Nivaran Sangh, a private association. The van went out of order and could not be repaired for want of funds.

பாளையங்கோட்டை மருத்துவ மனை

* 684 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா தலைநகர் பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரியில் க்ஷயரோக சிகிச்சைக்கு தனி வார்டு இருக்கிறதா?

(இ) இல்லையென்றால், எப்போது ஏற்படுத்தப்படும்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No Sir.

(b) As there is a Tuberculosis ward in the Headquarters Hospital, High Ground, Tirunelveli, it is not proposed to open a Tuberculosis ward in the Maternity Hospital, Palayamcottai.